# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2012-13

## மானியக் கோரிக்கை எண்.53

கே.டி. ராஜேந்திர பாலாஜி,
செய்தி மற்றும் சிறப்புத் திட்டச்
செயலாக்கத் துறை அமைச்சர்

©
தமிழ் நாடு அரசு
2012

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு –2012-13

## பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–4 |
| 2. | துறையின் பணிகளும் செயல்பாடுகளும் | 4–6 |
| 3. | கண்காணிப்பு | 7–15 |
| 4. | இத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 15–27 |
| 5. | நிறைவுரை | 27–28 |
| | இணைப்பு | |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு - 2012-13

## மானியக் கோரிக்கை எண். 53

### 1. முன்னுரை:

சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளில் மிகவும் பின்தங்கி உள்ளவர்களையும் உள்ளடக்கி ஒத்திசைவான மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உறுதியாக பெற்றிட வேண்டும் என்னும் குறிக்கோளுடன் பல்வேறு முன்மாதிரி சமூக பாதுகாப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. அரசின் இந்த இலக்கை அடைந்திடும் வகையில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெற தகுதியுடைய அனைத்து குடும்பங்களுக்கும் அரிசியை விலை இன்றி வழங்கல், ஏழைக் குடும்பங்களுக்கு விலையின்றி கறவைப் பசுக்கள் வழங்கல், ஏழ்மையிலும் ஏழ்மைநிலையில் உள்ளவர்களுக்கு விலையின்றி வெள்ளாடுகள்/

செம்மறியாடுகள் வழங்கல், திருமண உதவித் தொகையுடன் 'திருமாங்கல்யம்' செய்வதற்கு 4 கிராம் 22 காரட் தங்க நாணயம் விலையின்றி வழங்கல், மகளிர் பயனாளிகளுக்கு விலையின்றி மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் ஆகிய வீட்டு பயன்பாட்டுச் சாதனங்கள் மற்றும் மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கல், பள்ளி மாணவ மாணவியர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கல், மாணவ மாணவியர்களுக்கு காலணிகள் வழங்கல் போன்ற எண்ணற்ற சிறப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது. இவையன்றி, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை துரிதப்படுத்துவதற்காக மேலும் பல கொள்கை அறிவிப்புகளையும், திட்டங்களையும் இந்த அரசு கொண்டு வந்துள்ளது.

அரசின் அனைத்துத் திட்டங்களின் வெற்றிகளை கண்காணிக்கும் பணியும் மிகவும் இன்றியமையாததே. இந்த சிறந்த குறிக்கோளைக்

கொண்டு முழுமையான சமூக பொருளாதார வளர்ச்சியினை அடைய செயல்படுத்தப்பெறும் அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்களை (Flagship Schemes) கண்காணிப்பதற்காகவும் ஒருங்கிணைத்திடவும் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது** துடிப்பான மற்றும் தொலைநோக்கு கொண்ட தலைமையின் கீழ் இந்த அரசு அரசின் நலத்திட்டங்களும், சிறப்புத் திட்டங்களும் விரைந்து செயல்படுத்துவதற்காக அரசாணை (நிலை) எண்.423, பொது (சிறப்பு.ஏ) துறை, நாள்: 16.05.2011–ல் ‘‘சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை’’ என்னும் புதிய துறையை ஏற்படுத்தியுள்ளது. இத்துறையின் குறிக்கோள் சிறப்புத் திட்டங்களின் பயன்கள் தேவைப்படுகின்ற, மற்றும் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு சரியாகவும், விரைவாகவும் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, அத்திட்டங்களை முனைப்புடன் கண்காணிப்பதே ஆகும். இந்த செயல்பாட்டில் வளர்ச்சித் திட்டங்களில் பங்குபெறும் அனைவரையும்,

தொடர்புடைய துறைகளையும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஈடுபடுத்துகிறது.

## 2. துறையின் பணிகளும் செயல்பாடுகளும்:

### 2.1 இத்துறையின் முக்கியமான பணிகளும் செயல்பாடுகள் பின்வருமாறு:

- அரசின் பல்வகை சிறப்புத் திட்டங்களை தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து அத்திட்டங்கள் சிறப்பாகவும், விரைவாகவும் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்தல்.

- களஆய்வுகள் மேற்கொள்ளுதல், ஆய்வுக் கூட்டங்கள் நடத்துதல், திட்டங்களை செயல்படுத்தும்போது ஏற்படும் குறைகளை நிவர்த்தி செய்யும் வண்ணம் அலுவலர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

- இத்துறையின் அலுவலர்களைக் கொண்டு அடிக்கடி களஆய்வுகள் நடத்தி திட்டங்களின் செயல்பாட்டின் தரம் மற்றும் திறன் நிலை போன்றவற்றை ஆய்ந்து அவைகுறித்த கருத்துகளை அரசிற்கு இத்துறை அளிப்பதுடன், தேவைப்படும்போது அத்துறைகளுக்கு மாற்று வழிகளை பரிந்துரைத்தல். பல்வேறு திட்டங்களில் எதிர்நோக்கும் பயன்கள் எட்டப்படுவதற்கு ஏதுவாக சரியான மற்றும் தேவையான கொள்கையும், வழிகாட்டு நெறிமுறைகளும் உருவாக்கிடுவதற்கு உதவியாக பின்புல (feedback) அறிக்கைகளின் அடிப்படையில் பிற துறைகளுடன் தொடர்பு கொண்டு அத்துறைகளுக்கு கருத்துரைகளையும் வழங்குதல். மேலும், இதுபோன்ற தொடர் கண்காணிப்பால் இத்திட்டங்களின்

செயல்பாட்டினை செம்மைப்படுத்த ஏதுவாக இத்துறையின் செயல்பாடு அமைகிறது.

**2.2.** இத்துறையின் முக்கியக் குறிக்கோள் பல்வேறு திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணித்திடல் என்பதால் ஒரு விழிப்பு மற்றும் திறமை கொண்ட ஆய்வு மற்றும் கண்காணிப்பு அமைப்பு மிகவும் இன்றியமையாதது என்று கருதப்பட்டது. மேலும், திட்டங்களில் பல்வேறு கூறுகளைக் கண்காணிக்கவும், களநிலையில் ஆய்வு செய்யவும், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல், ஊரக வளர்ச்சி, வருவாய்த் துறை போன்ற பல்வேறு துறைகளிலிருந்து பன்முக அனுபவமும், பரந்த பட்டறிவும் கொண்ட அலுவலர்களைக் கொண்டு இத்துறையின் கண்காணிப்பு அலகு நன்கு வலுவாக அமைக்கப்பட்டுள்ளது.

### 3. கண்காணிப்பு:

3.1 எந்த ஒரு நல்ல திட்டமாக இருந்தாலும் அதன் தொடக்க வேகத்தை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும், அதன் இலக்கினை அடையவும், மதிப்பீடும், தொடர்ந்த ஊக்கமளிப்பும் கண்காணிப்பும் தேவை என்பது ஒரு உண்மை நிலை. எனவே, கண்காணிப்பு என்பது ஒரு திட்டத்தின் முன்னேற்றத்தினை நிர்ணயிக்கப்பட்ட கால அளவில் ஆய்ந்து அத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப் படுவதை உறுதி செய்வதற்கும், களத்தில் ஏற்படும் ஐயப்பாடுகளை நீக்கி சரியான பாதையில் செலுத்திடவும் உதவுகிறது. மேலும், திட்டங்கள் நடைபெறும்போதே அவற்றின் முன்னேற்றம் குறித்த விவரங்களை முறையாக சேகரிப்பதற்கும் பகுப்பாய்வதற்கும் தொடர் கண்காணிப்பு வழிகோலுகிறது.

**3.2 இத்துறையின் மூலமாக அரசின் பல்வேறு திட்டங்களைக் கண்காணித்தல்:**

மாநிலத்தின் சமூக பொருளாதார வளர்ச்சிக்காகவும் மற்றும் மக்களின் நீண்ட நாள் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டும் அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளது. இத்திட்டங்களின் முன்னேற்றத்தினை கண்காணிக்கும் பொறுப்பு இத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ளதால் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து கால முறைப்படி தகுந்த தகவல் தொழில் நுட்பத்தின் மூலம் உடன் நிகழ் (Online) முறையில் இத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்த விவரங்களை பெறுவதற்கான வழிமுறையினை இத்துறை உருவாக்கியுள்ளது.

**3.3 செயல்திறன்மிக்க கண்காணிப்பிற்காக வடிவமைக்கப்பட்ட வழிமுறைகள்:**

சிறப்பான முழுமையான கண்காணிப்பு அமைப்பினை உறுதி செய்வதற்கு இத்துறை பின்வரும் வழிமுறைகளை வகுத்துள்ளது.

**(i) அரசின் அறிவிப்புகளைக் கண்காணித்தல்:**

இந்த அரசு, பல்வேறு வளர்ச்சிப் பணிகள் குறித்த அறிவிப்புகளை, ஆளுநர் உரை, நிதி நிலை அறிக்கை, விதி 110ன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சிறப்பு அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களின் அறிவிப்புகள் மூலம் மக்களின் நலனிற்காக அறிவித்து அதனை அரசின் பல்வேறு துறைகள் வழியாக செயல்படுத்தி வருகிறது. இத்துறையால் வடிவமைக்கப்பட்டு தலைமைச் செயலகத்தின் உள்வலைய தளத்தில் (intranet) நிறுவப்பட்ட பயன்பாட்டிற்கு எளிதான மென்பொருள் மூலமாக சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து உடன் நிகழ் (online) முறையில் பெற்று இத்துறை இவ்வறிவிப்புகளின் முன்னேற்றங்களை உடனுக்குடன் பதிவு செய்து கண்காணிக்கிறது. இப்பணி சிறப்புற நடைபெற இதற்கென ஒவ்வொரு துறையிலும் நியமிக்கப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு

அலுவலர்கள் தங்கள் துறைத்தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் முன்னேற்றத்தை, மேற்குறிப்பிட்ட மென்பொருள் மூலமாக பதிவு செய்கின்றனர். இவ்வாறு காலமுறைப்படி பெறப்பட்ட முன்னேற்ற விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகள் தொகுக்கப்பட்டு அவற்றின் செயல்பாட்டு நிலை வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு துறைகளிலிருந்து பெறப்படும் தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்படும் தொகுப்பறிக்கைகள் உயர்நிலை ஆய்வுக்கூட்டங்கள் நடத்துவதற்கும், மற்றும் குறிப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. இம்முறையின் மூலம் அரசின் வளர்ச்சிப் பணிகள் குறித்த அறிவிப்புகள் செயல்படுத்தப்படுவதை எவ்வித விடுதலும் இன்றி செயல்திறன்மிக்க முறையில் கண்காணிக்க முடிகிறது.

**(ii) அரசின் முதன்மைத் திட்டங்களை வாரந்தோறும் கண்காணித்தல்:**

மாநில மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக பல்வேறு முதன்மைத் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. பல்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் இத்தகைய திட்டங்களைத் தொடர் கண்காணிப்பு செய்யும் பொறுப்பு இத்துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இத்துறை சம்பந்தப்பட்ட துறைகளுடன் தொடர்பு கொண்டு திட்டங்களின் அவ்வப்போதைய நிலை குறித்த விவரங்களை வாரந்தோறும் பெறுகிறது. இவ்வாறு பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் இத்துறையின் அர்ப்பணிப்புமிக்க அலுவலர்களால் அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன. அவ்வறிக்கைகள் ஆய்வுக் கூட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

**(iii) உயர்நிலை கண்காணிப்புக் குழு:**

அரசாணை (நிலை) எண்.1, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, நாள்: **02.01.2012**–ல் சிறப்புத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் ஓர் உயர்நிலை கண்காணிப்பு குழுவினை பின்வருமாறு அரசு ஏற்படுத்தியுள்ளது.

**உயர்நிலை கண்காணிப்புக் குழுவின் அமைப்பு**

| வ. எண் | அலுவலரின் பதவி | நிலை |
|---|---|---|
| 1. | அரசு தலைமைச் செயலாளர் | தலைவர் |
| 2. | அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை | உறுப்பினர் |
| 3. | அரசு செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை | உறுப்பினர் செயலர் |
| 4. | தொடர்புடைய துறைகளின் அரசு செயலாளர் | உறுப்பினர் |

முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டு நிலையை அறிவதற்கும் அவற்றின் சுணக்கங்களைக் களைந்து விரைவுபடுத்தவும், தக்க நடவடிக்கைகளை

எடுத்திட தேவையான அதிகாரம் கொண்ட அமைப்பாக இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழு திகழ்கிறது. இக்கூட்டங்களில், குறிப்பிட்டத் திட்டங்களின் செயல்பாடு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படும்பொழுது இத்திட்டங்களின் நிலை, திட்டங்களை செயல்படுத்தப்படும்போது எதிர்கொள்ளும் இடையூறுகள் மற்றும் பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகளும், பரிந்துரைகளும் உடனடியாக கண்டறியப்பட்டு அவை நிறைவேறும் வகையில் முறையாக செயல்படுத்தப்படுகின்றன.

(iv) **மாவட்டங்களில் ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:**

மாவட்ட அளவில், சிறப்புத் திட்டங்களின் செயலாக்கத்தினை கண்காணிப்பதற்கான ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் மாவட்ட ஆட்சியாளர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த

ஒருங்கிணைப்பு அலுவலர்கள் தொடர்புடைய பிற அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பணியாற்றவும் அவ்வப்போது பின்புல தகவல் (feedback) பெறவும், செயல்படவும் மாவட்ட அளவில் மையப் பொறுப்பாளர்களாக செயல்படுகின்றனர். மேலும், அவர்கள் இத்துறையின் அலுவலர்கள் களஆய்வு செய்வதற்கு உதவியாக உள்ளனர்.

**(V) கள ஆய்வுகள்:**

இத்துறையின் அலுவலர்கள் மாவட்டங்களில் களஆய்வு செய்து அளிக்கும் அறிக்கைகள் மூலம் பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டு தரம் குறித்த பின்புலத் தகவல் (feedback) அவ்வப்போது அரசிற்கு கிடைக்கிறது. இதுபோன்ற கண்காணிப்பு அமைப்பு ஒவ்வொரு திட்டத்தின் பாதையில் ஒரு சிறு விலகல் ஏற்பட்டாலும் உடனுக்குடன் அதனை சரிசெய்வதற்கு வழிகோலுகிறது.

### (vi) மண்டல ஆய்வுக் கூட்டங்கள்:

அரசின் முதன்மைத் திட்டங்களின் செயலாக்கம் குறித்த ஆய்வுக் கூட்டங்கள் மண்டல அளவில் மாவட்ட ஆட்சியாளர்களுடன், சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் நடத்தப்பட்டன. இதுபோன்ற மண்டல ஆய்வுக் கூட்டங்களில் அரசின் துறைகளிலிருந்து உயர் அதிகாரிகள் கலந்து கொண்டு இக்கூட்டங்களில் நடைபெறும் விரிவான கலந்துரையாடல்களால் திட்டங்களை எவ்வாறு செம்மையாகச் செயல்படுத்தலாம் என்பது குறித்து அறிந்து பயன் பெறுகின்றனர்.

## 4. இத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்:

அரசின் சிறப்புத் திட்டங்களை கண்காணிப்பதுடன், இரு முதன்மைத் திட்டங்களை

செயல்படுத்தும் பொறுப்பும் இத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. அவையாவன:–

(i) மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கல் மற்றும்

(ii) மகளிருக்கு விலையில்லா மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்.

**4.1 மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கல்:**

இந்த அரசு இம்மாநிலத்து இளைஞர்கள் சொந்த கால்களிலேயே உறுதியாக நிற்பதற்கு வசதியாக வலிமையும், திறமையும் நற்புலமையும் பெற்றிட வேண்டும் என்னும் சமூக நோக்கம் கொண்டுள்ளது. தேசிய மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் விரும்பும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இது இம்மாநிலத்து இளைஞர் சமுதாயத்திற்கு, வேலைவாய்ப்பில் அனுகூலமான

நிலையை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய அறிவுசார் உலகில், மாணவ சமுதாயத்திற்கு மடிக்கணினி ஒரு மிக அவசியமான சாதனமாக உள்ளது. மேலும், சமுதாய பொருளாதார அமைப்பில் அடித்தட்டிலிருந்து வரும் மாணவ மாணவியர்களும் இந்த துடிப்பான உலக அரங்கில் வலுவான கல்வி அடித்தளத்தோடு போட்டியிட வேண்டியுள்ளது. தகவல் தொழில்நுட்பக் கல்வி அறிவில் மாணவ மாணவியர்களிடையே நிலவும் இடைவெளியை அகற்றி, அனைவரும் சம அளவில் போட்டியிடத் தகுந்த தளத்தினை உருவாக்கவும், விரைந்து முன்னேறும் உலகப் பொருளாதாரத்திற்கு இயைந்தவாறு நமது மனித வளத்தை மேம்படுத்தவும் அவர்களது திறமைகளை வளர்க்கவும், இந்த அரசு மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்கும் புதுமையான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் கல்விக் கொள்கை தொடர்பான மூன்று முக்கியமான அடிப்படைகளான வாய்ப்பு, பங்கேற்பு, வெற்றிபெறல்

என்பனவற்றை எய்துவதற்கும் இந்த அரசு வழி அமைத்து கொடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12–ஆம் ஆண்டு மாணவ மாணவியர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் மடிக்கணினிகள் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மாணவ மாணவியர்கள் பின்வருமாறு பயன்பெறும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஆண்டுவாரியாக மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்**

| வருடம் | பள்ளிகள் | கலை (ம) அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | தொழில்நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 2011–12 | 12–ஆம் வகுப்பு | முதலாம் (ம) மூன்றாம் ஆண்டு | இரண்டாம் (ம நான்காம் ஆண்டு | முதலாம் (ம) மூன்றாம் ஆண்டு |
| 2012–13 | 12–ஆம் வகுப்பு | மூன்றாம் ஆண்டு | இரண்டாம் (ம) நான்காம் ஆண்டு | முதலாம் (ம) மூன்றாம் ஆண்டு |
| 2013–14 | 12–ஆம் வகுப்பு | – | – | முதலாண்டு |

2011–12ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் முதலாண்டு என்பதால் மொத்தம் 9,07,790 மடிக்கணினிகள் தேவைப்பட்டது மற்றும் இதற்காக அரசு ரூ.912 கோடி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டத்திற்கான மடிக்கணினிகள் கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (எல்காட்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளாகிய 2011ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15–ல் மடிக்கணினிகள் வழங்கும் திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்புடைய துறைகளான பள்ளிக் கல்வித் துறை, கல்லூரிக் கல்வித் துறை, தொழில்நுட்பக் கல்வித் துறை போன்ற துறைகள் வழியாக மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மடிக்கணினிகள் சரியாக வேலை செய்வதை உறுதி செய்யும் வண்ணம் வருவாய் வட்ட அளவில் சேவை மற்றும் பழுதுநீக்க மையங்கள்

அமைக்கப்பட்டுள்ளன. விலையில்லா மடிக்கணினி மென்பொருள் தொகுப்பில் ‘விண்டோஸ்’ தொடக்க நிலை பதிப்பு மற்றும் லினக்ஸ் அடிப்படையில் அமைந்த ‘பாரத் ஆப்பரேட்டிங் சிஸ்டம் சொலுஷன்’ (BOSS) ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இத்திட்டத்தின் தொடக்கத்திற்காக ‘எல்காட்’ நிறுவனம் 6,875 மடிக்கணினிகளை ஒரு குறுகியகால ஒப்பந்தப்புள்ளி மூலம் கொள்முதல் செய்தது. எஞ்சிய 9,00,915 மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்காக 2011 அக்டோபரில் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி ஒன்றை ‘எல்காட்’ நிறுவனம் கோரியது. ஆறு நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பெற்றாலும், சென்ற ஆண்டு வன்பொருள் தயாரிப்பில் முன்னணியில் இருக்கும் நாடுகளில் ஒன்றான தாய்லாந்தில் திடீர் வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்பால் அந்நிறுவனங்களால் ஒப்புக்கொண்ட காலமுறையில் மடிக்கணினிகள் வழங்க

இயலவில்லை. இப்போது இந்த நிலை மாறி இந்த நிறுவனங்கள் திருத்திய அட்டவணையின்படி 2012, டிசம்பருக்குள் அந்த மடிக்கணினிகள் அனைத்தையும் அளித்து விடுவதாக ஒப்புக் கொண்டுள்ளன. 2012 ஏப்ரல் வரை பெறப்பட்ட மடிக்கணினிகளை கலை (ம) அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் மாணவ மாணவியர்களுக்கு வழங்கிவிட்டு, 2011–12ஆம் ஆண்டின் 12–ஆம் வகுப்பு பயின்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் மடிக்கணினி படிப்படியாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன்மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை (ம) அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் ஆகிய கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவியர்களிடம் இன்முகத்தை இத்திட்டம்

ஏற்படுத்தி உள்ளது. ஏனெனில், இவர்களில் பலர் இத்திட்டத்தினால் முதன்முறையாக கணினியில் நேரடியாகப் பயிற்சி பெறும் பேற்றினைப் பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2012–13இல், 7.84 இலட்சம் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்படும் மற்றும் இதற்காக இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.1500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறிகளும், மிக்ஸிகளும் மற்றும் கிரைண்டர்களும் வழங்கல்:

பொருளாதார அடிப்படையில், மேலும் வளம்பெற மகளிர்க்குத் தேவையான சாதனங்களை வழங்கி அவர்களது வீட்டுப் பணிகளை எளிதாக்கி வசதியுறச் செய்வது அவசியமானதாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற, மகளிரை அவர்களது

தினசரி கடின உழைப்பிலிருந்து விடுவித்து அவர்களுக்கு சிரமமான வீட்டு வேலைகளிலிருந்து நிவாரணம் அளிக்க ‘ஒரு நன்கு சிந்தித்துத் தீட்டப்பட்ட நலத்திட்டமாக’ விலையில்லா மின்விசிறி, மிக்ஸி மற்றும் கிரைண்டர் அடங்கிய வீட்டு உபயோகச் சாதனங்களை ஒரு தொகுப்பாக வழங்கிட இந்த அரசு தீர்மானித்தது. 30.06.2011 அன்றுள்ள நிலையில் அரிசி பெறத் தகுதியுள்ள குடும்ப அட்டை வைத்துள்ள ஏறத்தாழ 1.85 கோடி குடும்பங்களில் உள்ள மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். வறிய மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதுடன் அவர்களுக்கு நவீன வீட்டு உபயோக சாதனங்களை அளித்து அவர்களுக்கு சம வாய்ப்பு வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ், 2011–12ஆம் ஆண்டில் 25 இலட்சம் குடும்பங்களுக்கு இச்சாதனங்களை வழங்க திட்டமிடப்பட்டது. மேலும், மீதமுள்ள

அனைத்து தகுதியுள்ள பயனாளிகளுக்கும் இச்சாதனங்கள் படிப்படியாக விநியோகிக்கப்படும்.

இத்திட்டத்திற்காக மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் கொள்முதல் செய்யும் பணி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்களைப் பயனாளிகளுக்கு வழங்குவது 2011ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாவட்ட அளவில் வருவாய்த் துறையால் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழும், சென்னையில் சென்னை மாநகராட்சி ஆணையரது கட்டுப்பாட்டிலும் பயனாளிகளுக்கு இச்சாதனங்கள் வழங்கப் படுகின்றன. இவை சரியான முறையில் செயல்படுவதை உறுதி செய்வதற்காக பொருட்கள் அளிக்கும் நிறுவனங்கள் மூலம் வருவாய் வட்ட

அளவில் சேவை மற்றும் பராமரிப்பு மையங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

மலைப்பகுதிகளில் மின்விசிறிகள் அதிக அளவில் பயன்படாது என்பதை கருத்திற்கொண்டு நீலகிரி மாவட்டத்திலும் திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியிலும் மின்விசிறிக்குப் பதிலாக மின்காந்த அடுப்பு (Induction Stove) வழங்க ஆணை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 34,000 மின்காந்த அடுப்புகள் கொள்முதல் செய்யப்பட்டு குறிப்பிட்ட இரு மலைப்பகுதிகளிலும் மகளிருக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மகளிருக்கு விலையில்லா மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கும்

இத்திட்டம் இந்த நிதி ஆண்டிலும் தொடரப்படும். **2012–13**ஆம் ஆண்டில் **35** இலட்சம் பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர். இதற்கென இந்த நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூ.**2000** கோடி தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பொருட்கள் தகுதியுடைய குடும்பங்களில் உள்ள மகளிருக்கு வழங்கப் படுகின்றன. குடும்பத்தில் அரிசி பெற தகுதி உள்ள குடும்ப அட்டை இருந்து, பெண் குடும்ப உறுப்பினர் எவரும் இல்லையெனில் அந்த குடும்பத் தலைவரிடம் இப்பொருட்கள் வழங்கப்படும். இவை முதலில் ஊரகப் பகுதிகளில் வழங்கப்படும். பின்னர் முறையே பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் வழங்கப்படும்.

இத்திட்டத்தை விரைவாகவும், நல்ல முறையிலும் செயல்படுத்த ஏதுவாக அரசு, வருவாய்த்

துறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்தி உள்ளது.

## 5. நிறைவுரை:

தமிழ்நாட்டில் பல்வேறு சிறந்தத் திட்டங்களை செம்மையாக செயல்படுத்துவதன் மூலம் எளிய மக்களின் வாழ்க்கையில் மாபெரும் தாக்கமும், மாற்றமும் ஏற்பட்டுள்ளன. மக்கள் நல அரசு செயல்படும் இம்மாநிலத்தில், அரசின் திட்டங்கள் மக்களின் வாழ்க்கையில் ஆதி முதல் அந்தம் வரை, அதாவது, ஆரோக்கியமான தாய்மார்கள் திடகாத்திரமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணவ மாணவியர்களது வேலைவாய்ப்புத் திறனை வளர்த்தல், மகளிரின் பணியினை எளிதாக்கி வசதியுறச் செய்தல், ஏழை எளியோருக்கு வாழ்வாதாரங்களை வழங்கி அவர்களது வருமானத்தை பெருக்குதல், ஊரக வறியவர்களுக்கு

சுற்றுச் சூழலுக்குத் தகுந்த இல்லங்களை அமைத்தல், சமுதாயத்தில் விதவைகள் மற்றும் நலிவடைந்தோர்க்கு உதவுதல், தேவையுள்ள அனைவருக்கும் மருத்துவ காப்பீடு போன்ற சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த அரசின், நல்லெண்ணத்துடன் புதுமையாக உருவாக்கப்பட்ட உன்னதமான திட்டங்கள் அனைத்தும் முழுமையாகவும், செம்மையாகவும் செயல்படும் வகையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது** ஆற்றல்மிகு தலைமையின் கீழ் அரசின் சிறப்புத் திட்டங்களின் குறிக்கோள்களை எட்டுவதற்கு உதவிடும் வகையில் இந்தத்துறை புத்துணர்வுடன் பீடுநடை போடுகிறது.

**கே.டி. ராஜேந்திர பாலாஜி,**
**செய்தி (ம) சிறப்புத் திட்டச்**
**செயலாக்கத் துறை அமைச்சர்.**

# மாணவ மாணவியர்களுக்கு மடிக்கணினி வழங்குதல் – 2012–13

(மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை – இலட்சத்தில்)




2012–13 –ல் மதிப்பிடப்பட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 7.84 இலட்சம்

# 2012–13 –ல் வழங்கப்படவுள்ள மடிக் கணினிகள்

## மாவட்ட வாரியான மொத்த பயனாளிகள்

இத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 7.84 இலட்சம்



## மின்விசிறிகள், மிக்ஸிகள் மற்றும் கிரைண்டர்கள் வழங்கல்

### மாவட்ட வாரியான மொத்த பயனாளிகள்

இத்திட்டத்தின் கீழ் மதிப்பிடப்பட்ட மொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 1.85 கோடி

